## கழக ஆட்சியில் கோ - ஆப்டெக்ஸ் நிறுவனம் தொடர்ந்து லாபம் ஈட்டி வருகிறது

## சேலத்தில் ரூ.881.15 கோடியில் விரைவில் ஜவுளிப் பூங்கா!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சியால் கைத்தறி நெசவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது!

## பேரவையில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பதிலுரை!

**சென்னை, ஜூலை 1-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் கைத்தறி நெசவில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது என்றும், சேலத்தில் விரைவில் ரூ.881.15 கோடி மதிப்பில் ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என்றும் சட்டப்பேரவையில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை மானியக் கோரிக்கையில் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் ஆர். காந்தி குறிப்பிட்டார்.**

பேரவையில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பதிலுரை வருமாறு:-

சாதி ஒழிப்புக்காகவும், சமூக நீதிக்காகவும் உழைத்த, பகுத்தறிவு பகலவன், தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். நம் இயக்கத்தை துவக்கி, தமிழ் இனத்தை முன்னேற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். பள்ளியில் படிக்கும்போது போராட துவங்கிய கலைஞர், இந்தித் திணிப்புக்கு எதிராக போராடிய தலைவர், இந்திய அரசியலை தமிழ்நாட்டை நோக்கி திரும்பி பார்க்க வைத்த தமிழினத் தலைவர், கணினி பூங்கா தந்த நவீன தமிழகத்தின் சிற்பி. அனைத்து போராட்டங்களிலும் வென்ற நூற்றாண்டு நிறைவு விழா நாயகர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நமது இயக்கத்தை, அடுத்த தலைமுறைக்கு எடுத்து சென்று வழி காட்டியவரும். . .

எங்களுக்கு பிறகு இந்த இயக்கத்தின் தலைவர் தளபதி தான் என்று சொன்னவரும், நமது தளபதியின் பாச மிகு பெரியப்பா, இனமான பேராசிரியர் அவர்களை வணங்குகிறேன். அரசியல் மாமேதை, தலைவர் கலைஞரின் மனசாட்சி, அண்ணன் முரசொலி மாறன் அவர்களை வணங்குகிறேன்.

## நெசவாளர் குடும்ப ஓய்வூதியம்

## நெசவாளர் மாதாந்திர ஓய்வூதியம் அதிகரிப்பு

கழக ஆட்சி பொறுப்பேற்ற உடன் தமிழ்நாட்டை, கொரோனாவே இல்லாத மாநிலமாக மாற்றி, இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராகவும், இந்தியா கூட்டணி அமைத்து, இந்தியாவிற்கே வழிகாட்டும் தலைவராகவும், தமிழகத்தின் தலைவராக பொறுப்பு ஏற்ற நாள் முதல், சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றி! வெற்றி! வெற்றி! என்ற வெற்றி நாயகர், (மேசையைத் தட்டும் ஒலி) 40க்கு 40 வெற்றி கண்ட, திராவிட மாடல் ஆட்சி நாயகர், எங்கள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களுக்கு வணக்கம்.

அவை முன்னவர், சட்டமன்றத்தின் மூத்தவர், நீர்வளத் துறை அமைச்சர், அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கு வணக்கம். கடும் வெயிலை பாராமல், மக்களோடு மக்களாக நின்று, அனைத்துத் தரப்பு மக்களும், கூட்டணி கட்சி தலைவர்களும் பாராட்டும் வகையில், நாம் சந்தித்த, அத்தனை தேர்தல்களிலும், வெற்றி பெறுவதற்கு, எளிய முறையில் பேசி, மக்களை கவர்ந்தவர், எங்களின் இளைய தலைவரே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் எதிர்காலமே, அமைச்சர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வணக்கம். கழகத்தின் மூத்தவர், எனது அரசியல் ஆசான், அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கு வணக்கம். எனது வாழ்நாள் குடும்ப நண்பர் முரசொலி செல்வம் அவர்களுக்கு வணக்கம். அமைச்சர் பெருமக்களுக்கு வணக்கம், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம், அரசு தலைமை கொறாடா அவர்களுக்கு வணக்கம், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம். இந்த மாமன்றத்தில், தொடர்ந்து பணியாற்ற எனக்கு வாய்ப்பு அளித்த இராணிப்பேட்டை தொகுதி மக்களுக்கு வணக்கம்.

இந்த பேரவையில், இந்தத் துறையின் மானிய கோரிக்கையை, 4வது முறையாக தாக்கல் செய்ய, எனக்கு வாய்ப்பு வழங்கிய, முதலமைச்சர் அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த வணக்கம். கழக வெற்றிக்காக பாடுபட்ட அனைத்து கழக நிர்வாகிகள், தலைவரின் தொண்டர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோர் அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்நாட்டின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுடன் கைத்தறி நெசவு பின்னிபிணைந்து உள்ளது. நாட்டு முன்னேற்றத்தில், நெசவுத் தொழில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. நெசவாளர்களின் நலனில் எப்போதும் அக்கறைக் கொண்டு உள்ள கழக அரசு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நெசவாளர்களும் பயன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நெசவாளர் குடும்பங்களையும், இந்த அரசு கண் இமைப் போல் காத்து வருகின்றது. கழக அரசு பொறுப்பு ஏற்றது முதல், இந்தத் துறையின்கீழ் செயல்படும் அனைத்து நிறுவனங்களும் சிறப்பாக செயல்பட்டு, தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால், கைத்தறி நெசவில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு கூலி உயர்வுகழக ஆட்சி பொறுப்பு ஏற்ற உடனே, முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதன்முறையாக கைத்தறி நெசவாளர்களுக்கு, 1.1.2022 முதல், Wages 10%, D.A.ல் 10% உயர்த்தி கூலி உயர்வு வழங்கப்பட்டது. மேலும், நெசவாளர்களுக்கு, 10% கூலி உயர்வு ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இது, எப்போதும் இல்லாத திராவிட மாடல் ஆட்சியின் சாதனை ஆகும்.

தள்ளுபடி மானியம் (Rebate Scheme)2022க்கு முன்னர் கிட்டத்தட்ட 160 கோடி ரூபாய் நிலுவையாக இருந்தது. கடந்த 3 ஆண்டுகளையும் சேர்த்து, மொத்தம் ரூபாய் 760 கோடி விடுவிக்கப்பட்டு உள்ளது.

வேட்டி சேலை வழங்கும் திட்டம்16 வருடங்களாக இதுவரை இல்லாத அளவிற்கு சென்ற வருடம் 31 டிசம்பரிலேயே வருவாய் துறைக்கு மொத்தமாக அனுப்பியது இதுதான் firtst time. (மேசையைத் தட்டும் ஒலி) பொங்கலுக்கு முன்பே வேஷ்டி, சேலை அனுப்பியது இப்போதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேமாதிரி, முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் தரமான பொருள் கொடுத்தோம். எல்லோரும் விரும்பி எடுத்துச் சென்றார்கள்.

பள்ளி சீருடை திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயகர் அவர்களின் ஆணைக்கிணங்க, 4 Sets Uniform கொடுக்கிறோம். இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு 2 Sets Uniform ஜூன் மாதத்திற்குள் கொடுத்தது இது தான் first time. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலும் கிடையாது.

சிறிய அளவிலான கைத்தறி பூங்கா (Mini Handloom Park), 20232024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை (Budget) அறிக்கையில், சிறிய கைத்தறி பூங்காக்கள், தமிழ்நாட்டில் 10 இடங்களில், தலா ரூபாய் 2 கோடி செலவில், அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டின் முதல் Mini Handloom Park காஞ்சிபுரத்தில் 2922024 அன்று திறந்து வைக்கப்பட்டது. 2வது Park, குடியாத்தம் நகரில் 932024 அன்று இடத்தினை பார்வையிடப்பட்டு, பூங்கா துவக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3வது Park, திண்டுக்கல் மாவட்டம், இதற்கு நிறைய முயற்சி எடுத்தவர் அமைச்சர் அர. சக்கரபாணி அவர்களும், அமைச்சர் இ. பெரியசாமி அவர்களும்தான். இல்லை, 3வது Park, திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலும் மற்றும் நரிக்கல்பட்டியிலும் 14.6.2024 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

Unity Mall என்பது தமிழ்நாட்டின் கைத்தறி பொருட்களை சந்தைப்படுத்தவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும், ஒருங்கிணைந்த வணிக வளாகம் (Unity Mall), Chennai, Egmore,Cooptex வளாகத்தில், 4.5 இலட்சம் சதுரடி பரப்பளவில், ரூபாய் 227 கோடி மதிப்பீட்டில், 9 மாடி கட்டடம் அமைக்க, பணிகள் நடைபெற்று வருகின்றன. tender விடப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



ஆரணியில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டு பூங்கா, 22 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் ரூபாய் 74 கோடி மதிப்பீட்டில் அமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜவுளி தொழில் முனைவோர்களுக்கு அரசு மானியம் வழங்கியது. Tamil Nadu New Integrated Textile Policy திட்டத்தின்கீழ், விசைத்தறிகளை நவீனப்படுத்த, 10 சதவிகிதம் அரசு மானியத் தொகை, 17 ஜவுளி தொழில் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 22.1.2024 அன்று ரூபாய் 9.25 கோடி தொகை வழங்கப்பட்டது. மேலும், 29 ஜவுளி தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 15.27 கோடி 4.3.2024 அன்று விடுவிக்கப்பட்டு உள்ளது.

விசைத்தறிகளுக்கு விலையில்லா மின்சார திட்டம் கழக ஆட்சியில், 2006 ஆம் ஆண்டு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால், அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது, நம்முடைய தலைவர் அவர்கள், 3.3.2023 முதல், கைத்தறி நெசவாளர்களுக்கு, bimonthly 200 Unitsலிருந்து 300 Units ஆகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு, bimonthly 750 Unitsலிருந்து 1000 Units ஆகவும், உயர்த்தி வழங்கி முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.19.38 கோடியும், விசைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.1,095.40 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப ஜவுளித்துறையின் முதலீடுகளுக்கு மானியம் அதிகரிப்பு

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் பற்றி நேற்றுகூட பேசினார்கள். நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம், ஒன்றிய அரசின் PM AWAS YOJANA திட்டத்தின்கீழ், இதற்கு முன்பு ஒரு வீடு கட்டுவதற்கு, ரூபாய் 2.10 லட்சம் முதல் ரூபாய் 2.50 லட்சம் மட்டுமே மானியம் வழங்கப்பட்டது. ஆனால், நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தற்போது, கிராமங்களில் விசைத்தறி நெசவாளர்களுக்கு ஒன்றிய அரசின் பங்கு ரூ.79,200, மாநில அரசின் பங்காக ரூ.3,20,800 மொத்தமாக ரூ.4 இலட்சம் வழங்க நமது முதலமைச்சர் ஆணையிட்டார்கள். நகர்ப்புரங்களில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.1,50,000, மாநிலத்தின் பங்கோ ரூ.2,50,000 என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 496 பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, 240 பயனாளிகளுக்கு ரூ.5.06 கோடி மானியம் விடுவிக்கப்பட்டு உள்ளது.

நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம், அதேபோன்று நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம் கைத்தறி நெசவாளர்களுக்கு, மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூபாய் 1,000/லிருந்து, ரூபாய் 1,200/ ஆக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 182023 முதல் உயர்த்தப் பட்டது.

Weavers Savings & Security Scheme (SSS) SSS, முழு தொகையினை பெறுவதற்கு குறைந்தபட்ச கால அளவினை 25 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக 5.7.2023 முதல் குறைக்கப்பட்டு உள்ளது.

ஈமச் சடங்கு உதவித் தொகை, நெசவாளர்கள் இறக்கும் போது அவர்களின் ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை, ரூபாய் 2,000/லிருந்து, ரூபாய் 5,000/ ஆக முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி தந்திருக்கிறார்கள்.

Special medical camps டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, 118 சிறப்பு மருத்துவ முகாம்கள் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு, 34,873 நெசவாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

கழக ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் முதன்முறையாக, மாநில அளவிலான Young designers award அறிமுகம் செய்யப்பட்டது. பரிசுத் தொகையாக முதல் பரிசு ரூ.1,00,000/, இரண்டாம் பரிசு ரூ.75,000/ மூன்றாம் பரிசு ரூ.50,000/. கல்லூரி மாணவர்களின் சிறந்த வடிவமைப்புகளுக்கு, முதலமைச்சர் அவர்களால், 18.4.2023 அன்று Young designers awardக்கான பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களால் ரூபாய் 7 கோடி 78 இலட்சம் மதிப்பில் Cooptex விற்பனை நிலையங்கள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் புதிய கட்டடங்கள், 22.8.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சரிகை ஆலை புனரமைப்பு ரூபாய் 1 கோடியே 14 இலட்சம் மதிப்பீட்டில், 28.12.2023 அன்று அக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

Electronic panel board பொருத்துதல் விசைத்தறிகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், ரூபாய் 12 கோடி மதிப்பில், ரூபாய் 6 கோடி அரசு மானியத்துடன் 5,000 விசைத்தறிகளில் Electronic panel board நிறுவப்பட்டுள்ளது.

Cooptex இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து 3 ஆண்டுகாலத்தில், இதுவரையில், கிட்டத்தட்ட 18 Showrooms. மொத்த இந்திய அளவில் 154 Showrooms உள்ளன. அவற்றில் தமிழ்நாட்டில் 105 Showrooms உள்ளன; மீதி 49 Showrooms வெளி மாநிலங்களில் உள்ளன. அவற்றில் 48 Showroomsல், ரூபாய் 16 கோடி 17 இலட்சம் மதிப்பீட்டில் Showrooms modernization செய்யப்பட்டுள்ளன.

விற்பனையைப் பொறுத்த அளவில், இந்த 3 ஆண்டுகளில் சிறிது சிறிதாக தொடர்ந்து விற்பனை அதிகரித்து வருகிறது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று பதவியேற்றபின்னர், ஆண்டு விற்பனை 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.171 கோடி 90 இலட்சம், 20222023 ஆம் ஆண்டில், ரூ.200 கோடி 92 இலட்சம், 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.214 கோடி 54 இலட்சம் இலாபம் ஈட்டியது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பதவியேற்பதற்கு முன்னர், கோஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.7 கோடி, 61 இலட்சம் நட்டத்தில் இருந்தது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்று பதவியேற்ற பின்னர், 2021-2022 ஆம் ஆண்டில் அந்த நட்டம் போக, முதலில், Net profit ரூ.9 கோடியே 49 இலட்சம், 20222023 ஆம் ஆண்டில் Gross profit ரூ.24 கோடி. இந்தத் தொகை Showroom Rent arrears மற்றும் Showroom modernization தொகை போக Net profit 11 கோடியே, 57 இலட்சம். 2023-2024 Gross profit Rs.16 கோடியே 12 இலட்சம் மற்றும் Net profit 12 கோடியே, 50 இலட்சம் என்ற வகையில், இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

"Handlooms of India" விற்பனை அங்காடி தமிழ்நாடு மற்றும் பிற மாநில கைத்தறி இரகங்களை, ஒரே இடத்தில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக, ஒருங்கிணைந்த விற்பனை அங்காடி, (Handlooms of India Showroom), கோயம்புத்தூரில் 12.5.2023 அன்று திறக்கப்பட்டது.

Chennai, "Satya Jothi Sheltered Workshop for the Blind" நிறுவனத்தில் மாற்றுத்திறனாளிகள் நெசவு செய்ய, 10 கைத்தறிகளுக்கு நூல் வழங்கப்பட்டு, தறிகளில் முழு அளவில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும், 5 தறிகள் நிறுவப்பட்டு, 10 நபர்களுக்கு நெசவு பயிற்சி வழங்கப்பட்டு, உற்பத்தி செய்து வருகின்றனர்.

Handloom outreach programme, கல்லூரி மாணவர்களுக்கு கைத்தறி இரகங்களின்மீது விழிப்புணர்வை ஏற்படுத்தி, விற்பனையினை அதிகரிக்க, "Handloom outreach programme" கடந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதுவரை 207 கல்லூரிகளில் நடத்தப்பட்டு, ரூபாய் 2 கோடி 71 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதலில், கடந்த ஆண்டு 3 விற்பனை நிலையங்கள் ரூபாய் 3.62 கோடி மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டன, தங்கம் பட்டு மாளிகை, சேலம், Balamurugan Showroom, Coimbatore, வசந்தம் விற்பனை நிலையம், ஈரோடு.

Virtual reality dressing centre, வாடிக்கையாளர்கள் தாம் விரும்பும் கைத்தறி ஆடைகளை, அணிந்து பார்ப்பது போன்ற வசதியினை ஏற்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர் ஒரு புடவையை தன்மீது போட்டுப் பார்த்து கண்ணாடியின் முன்பு நின்று பார்த்தார்களேயானால், அந்தப் புடவையை அவர் கட்டியது போலவே காட்டும் வசதி செய்யப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் ரகம் பார்த்து வாங்கிக்கொள்ளலாம். சென்னை, எழும்பூர், கோஆப்டெக்ஸ், விற்பனை வளாகத்தில், 7.8.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

துணிநூல் கழக ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன், துணிநூல் துறை புதிதாக உருவாக்கப்பட்டு, ஜவுளித் துறையினரின் முன்னேற்றத்திற்கு பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

Mini Textile Park சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ், இது வரை மொத்தம் 9 சிறிய ஜவுளி பூங்காக்கள் அமைக்க ரூபாய் 20 கோடி மானியம் வழங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

முதலமைச்சர் அவர்களால், 22.1.2024 அன்று தொழில் முனைவோர்களுக்கு ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டது. மேலும், 20242025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, நடப்பாண்டில் ரூபாய் 20 கோடி செலவில், 10 சிறிய ஜவுளி பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளது. பஞ்சு & நூல் விலை கட்டுப்படுத்தியது.

முதலமைச்சர் அவர்களால், ஒன்றிய அரசினை தொடர்ந்து வலியுறுத்தியதால், 11% Import Duty on Cotton, 31.10.2022 வரை ஒன்றிய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள், 11% பஞ்சு இறக்குமதி வரியை நீக்கக்கோரி, பிரதமர் அவர்களுக்கு, 19.7.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கிணங்க, Extra Long Staple (ELS) Cotton பஞ்சு இறக்குமதிக்கு மட்டும் 11% Import Duty 20.2.2024 முதல் ஒன்றிய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி ஜவுளி இரக உற்பத்திற்கு தேவையான Viscose Staple Fiber இறக்குமதிக்கு Quality Control Orderலிருந்து 11.3.2024 முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, தமிழ்நாட்டில், நூற்பு ஆலைகளில் உள்ள இயந்திரங்களை Modernization செய்ய, வங்கி கடனுக்கான வட்டித் தொகையில்,இது மிகவும் முக்கியமான ஒன்று இப்போது நிறைய மில்கள் இருப்பதால் Modernization செய்ய வங்கிகளில் கடன் வாங்குவார்கள். வங்கி வட்டி விகிதம் குறைந்தபட்சம் 78% முதல் அதிகபட்சம் 9% வரை இருக்கும். இதற்கு முன்பு அதற்கு அரசு மானியமாக 2% வழங்கப்பட்டது.

ஆனால், நம்முடைய தலைவர் அவர்கள்இதற்குத்தான் சொல்வது. எங்கள் தலைவர்—நான்கூட ரொம்ப free ஆகப் பேசுவேன். இப்போதெல்லாம் அவர் calm ஆக இருப்பார்; பேச மாட்டார்; எப்போதுமே அவருக்கு சிந்தனை. காரணம், இங்கு பேசிய அமைச்சர் பெருமக்கள் ஒவ்வொரும் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நடைபெறுகிற ஒவ்வொரு துறைகளைப் பற்றியும் பெருமையாகப் பேசினார்கள். ஆனால், கடந்த மூன்று வருடங்களில் என்ன நடந்தது என்கிறார்கள். இந்தமாதிரி, யாருடைய ஆலோசனையையும் கேட்காமல் அவர் எப்படி யோசிக்கிறார் என்று தெரியவில்லை.

கலைஞர் அவர்கள் எந்தவொரு திட்டத்தை அறிவித்தாலும், அது விவசாயிகளுக்காக இருந்தாலும் சரி, மகளிருக்காக இருந்தாலும் சரி அது எதுவாக இருந்தாலும், அவர் யாரையும் கேட்க மாட்டார். அவரே சிந்திப்பார், பின்னர் அறிவிப்பாக செயல்படுத்துவார். அதுதான் கலைஞர். ஆனால், இவர் அவரை மிஞ்சுகின்ற அளவிற்கு இருக்கிறார். ஆக, நூற்பு ஆலைகளுக்கான வட்டி மானியம்

2 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார். வங்கிகளில் கடன் வாங்கினால் 1 சதவிகிதம் முதல் 2 சதவிகிதம் வரைதான் வட்டி வழங்கப்படுகிறது. இந்தமாதிரி எங்கேயும் இல்லை. 10 சதவிகிதம் மானியம் என்றளவில் ரூ.500 கோடிக்கு நிதி ஒதுக்கி விட்டார்கள். இது சாதாரண வேலை கிடையாது. யாரும் சிந்திக்காத வேலை இது; யாரும் கேட்காத ஒன்று இது.

அதேபோல, Textile City சென்னைக்கு அருகிலுள்ள திருமழிசை நகர் ஒரு மாபெரும் ஜவுளி நகரம். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான, 64.03 ஏக்கர் நிலத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு (Tamil Nadu Global Investors Meet) January 7th & 8th, 2024 ஜவுளித் துறையில் ரூபாய் 5,042 கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கு, 67 தொழில் முனைவோர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) போடப்பட்டுள்ளது.

சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் Tamil Nadu Pavilion அமைத்தல் சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் தமிழ்நாட்டை சேர்ந்த தொழில் முனைவோர்களை கொண்டு, தமிழ்நாடு அரசு தனியாக, Tamil Nadu Pavilion அமைத்து வருகிறது. அதன்படி, February 2023ல் Techno Tex, Mumbai November 2023ல், Melbourne, Australia, February 2024ல், BharatTex, New Delhi ஆகிய கண்காட்சிகளில்

Tamil Nadu Pavilion அமைத்து, கலந்து கொள்ளப்பட்டது. International Conference on Technical Textiles முதல் Conference, November 2022ல், சென்னையிலும் 2வது Conference, November 2023ல் கோயம்புத்தூரிலும் நடத்தப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி, தொழில்நுட்ப ஜவுளித் துறையின் முதலீடுகளுக்கு மானியத் தொகை, 15%லிருந்து 25% ஆக உயர்த்தி, 10 ஆண்டு காலத்தில் வழங்கப்படும்.

தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (Technical Advisory Committee) தமிழ்நாட்டில், ஜவுளி தொழிலை மேம்படுத்த தேவையான ஆலோசனை வழங்க, தொழில்நுட்ப ஆலோசனை குழுவின் முதல் கூட்டம் 22.6.2023 அன்று கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது.

New Textile Policy. நூற்பு பிரிவு, நெசவு பிரிவு, பதனிடுதல், தொழில்நுட்ப ஜவுளிகள் முழுமையான வளர்ச்சியடையும் வகையில் புதிய ஜவுளிக் கொள்கை விரைவில் வெளியிடப்பட உள்ளது. (குறுக்கீடு) கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய பலன்கள். இது அதிக நாட்களாக 1998 முதல் 2019 வரை நிலுவை EPF dues, 4 கோடியே 16 இலட்சம். அந்த EPF நிறுவனத்திற்கு

தொடர்ச்சி -4 ஆம் பக்கம்